## மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம், நாகப்பட்டினம் மாவட்டம்.

இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வரும் கல்வி விடுதிகளில் காலியாக உள்ள சமையலர் பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பு

| வ. எ | பதவி | காலிப்பணி யிடம் | ஊதியம் | இனச் சுழற்சி | |
|---|---|---|---|---|---|
| | | | | Priority | Non-Priority |
| 1 | **சமையலர் (ஆண்)** | 11 | அரசாணை எண் 303, நிதித்துறை நாள் 11.10.17–ன்படி புதிய ஊதியம் ரூ. 15700/– மற்றும் இதர படிகள் | MBC/DNC -1 | GT - 4,BC -3,SC-1 SCA -1& MBC/DNC-1 |
| 2. | **சமையலர் (பெண்)** | 8 | | GT -1,SC -1 | GT-1,BC-2,BCM -1& MBC/DNC -2 |

மேற்கண்ட சமையலர் **(ஆண்/ பெண்)** காலிப்பணியிடங்கள் நேர்காணல் மூலம், இனச்சுழற்சியின் அடிப்படையில் நிரப்பப்பட உள்ளது. இதற்காக பின்வரும் தகுதியுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1. தமிழில் எழுத, படிக்க தெரிந்திருக்க வேண்டும்.
2. சைவ மற்றும் அசைவ உணவு வகைகள் தரமாகவும், சுவையாகவும் சமைக்கத் தெரிந்திருக்க வேண்டும்.
3. வயது வரம்பு 1.07.2020 தேதியில் SC/ST-18 முதல் 35, BC,BCM,MBC & DNC -18 முதல் 32, இதர பிரிவினர் 18 முதல் 30 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும். அரசு விதிமுறைகளில் அனுமதிக்கப்பட்டவாறு வயது வரம்பில் தளர்வு அளிக்கப்படும்.

மேற்படி தகுதிகளுடன் நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளில் முழுநேர சமையல் பணிபுரிய விருப்பம் உள்ளவர்கள், www.nagapattinam.nic.in என்ற இணையதள முகவரியில் வெளியிடப்பட்டுள்ள விவரங்களை அறிந்து விண்ணப்பபடிவத்தினை பதிவிறக்கம் செய்தோ அல்லது நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் கீழ் தளத்தில் செயல்படும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் நேரடியாக விண்ணப்ப படிவத்தினை பெற்றோ அதனை பூர்த்தி செய்து, உரிய சான்றுகளின் நகல் இணைத்தும், சமீபத்தில் எடுக்கப்பட்ட பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஒட்டி அதனை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாகப்பட்டினம் என்ற முகவரிக்கு 21.09.2020 தேதி மாலை 5.00 மணிக்குள் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும், காலதாமதமாக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் மற்றும் முகவரி தவறாக இருந்து, அழைப்பாணை திரும்ப பெறப்படும் விண்ணப்பங்கள் ஆகியவற்றின் மீது அரசு பரிசீலிக்காது எனவும் மனுதாரரே முழுப்பொறுப்பு எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மனுதாரர்களை மேற்கண்ட தகுதியின் அடிப்படையில் விண்ணப்பம் செய்து கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

ஒம்/—பிரவின் பி நாயர்
மாவட்ட ஆட்சித் தலைவர்
நாகப்பட்டினம்.

9.2020

மாவட்ட ஆட்சித் தலைவருக்காக
நாகப்பட்டினம்.

9/2020